செ.வெ.எண்: 78 நாள் :24.08.2023

**பத்திரிக்கை செய்தி**

கோயம்புத்தூர் மாவட்டம், குழந்தைகள் நலக்குழுவில் காலியாக உள்ள உதவியாளருடன் இணைந்த கணினி இயக்குபவர் (Assistant cum Data Entry Operator - Rs.11,916/-) ஆகிய பணியிடத்தை தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நிரப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

உதவியாளருடன் இணைந்த கணினி இயக்குபவர் (Assistant Cum Data Entry Operator) பணியிடத்திற்கு 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் கணினி கல்வியியல் பட்டய படிப்பு (DCA) முடித்திருக்க வேண்டும். மேலும் தட்டச்சு கல்வியில் தமிழ் மற்றும் ஆங்கிலம் முதுநிலை தகுதியை (Typewriting Tamil and English Senior Level) முடித்திருக்க வேண்டும். கணினி இயக்குவதில் சிறந்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் 11.09.2023 அன்று 40 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை **https://coimbatore.nic.in** என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தகுதியுள்ள நபர்கள் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்துடன் சான்றிதழ்களின் நகல்களை இணைத்து மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, 2வது தளம், பழைய கட்டிடம், மாவட்ட ஆட்சியர் வளாகம், கோயம்புத்தூர் - 641 018 என்ற முகவரிக்கு வரும் 11.09.2023 அன்று மாலை 05.45 மணிக்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கிராந்தி குமார் பாடி,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு-செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம்**

---

கோயம்புத்தூர் மாவட்ட அரசு செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள

collectorCoimbatore collectorCbe Pro Cbe cbe_pro prokovai22